கமத்தொழில், கால்நடை, காணிகள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு
ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி மற்றும்
காலநிலைக்கு சீரமைவான திட்டம் (IRDCRP)

WORLD BANK GROUP

# செயற்றிட்ட பணியாளர்களை ஆட்சேர்த்தல்

ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி மற்றும் காலநிலைக்கு சீரமைவான திட்டமானது (IRDCRP) இலங்கை அரசாங்கம் (GOSL) மற்றும் உலக வங்கி என்பன இணைந்து நிதியுதவியளிக்கப்படும் கமத்தொழில், கால்நடை, காணிகள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சினால் செயற்படுத்தப்படும் ஒரு திட்டமாகும். இதன் மொத்த செயற்றிட்டச் செலவு 103 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும் என்பதுடன் இது கமத்தொழில், கால்நடை, கடற்றொழில் மற்றும் பெருந்தோட்டத் துறைகளில் உள்ள சிறு மற்றும் நடுத்தர சமுதாயத்தினரிற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதுடன் பண்ணை மதிப்புப் பெறுமதிசார் சேர்க்கை வலைப்பின்னல் சங்கிலியில் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த 05 ஆண்டு காலத் திட்டத்தின் பிரதான நோக்கமானது செயற்றிட்டப் பிரதேசங்களில் கமத்தொழில் உணவு உற்பத்தியாளர்களின் உற்பத்தித் திறன், போட்டித் தன்மை மற்றும் காலநிலைக்கு சீரமைவான திட்டத்தை மேம்படுத்துவதாகும்.

செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவின் (PMU) பின்வரும் (01 மற்றும் 02) பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சம்பளம் 2019 மார்ச் 05ஆம் திகதிய 01/2019ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றுநிருபத்தின் அடிப்படையில் வழங்கப்படும்.

| இல. | சம்பள வகுதியின் நிலை | பதவி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | PS 1 | செயற்றிட்டப் பணிப்பாளர் | 01 |
| 02 | PS 3 | நிதி முகாமைத்துவ நிபுணர் | 01 |

**அடிப்படைத் தகைமைகள் மற்றும் அனுபவம்**

அடிப்படைத் தகைமைகள் மற்றும் வேலை அனுபவம் முதலானவை 01/2019 ஆம் ஆண்டின் முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைவாக இருப்பதோடு அவை அனைத்தும் விண்ணப்ப இறுதித் திகதியில் பூர்த்திசெய்யப்பட்டவையாகவும் இருக்க வேண்டும்.

பொது நிபந்தனைகள்:

- **வயதெல்லை:** விண்ணப்ப இறுதித் திகதியில் அறுபத்தியிரண்டு (62) வயதிற்குக் குறைவாகவிருத்தல் வேண்டும்.
- நன்கொடையாளர் நிதியளிப்புத் திட்டத்தில் இதனையொத்த அல்லது உயர்ந்த திறன்விருத்தி வேலை அனுபவம்
- பெறுகை / கணக்கியல், வியாபாரம் மற்றும் பெறுமதிசார் சேர்க்கை வலைப்பின்னல் சங்கிலி அபிவிருத்தி, சந்தைப்படுத்தல், வழங்கல், குள புனரமைப்புகள், 4P வியாபார மாதிரி மற்றும் குள அடுக்கு இணைப்பு முகாமைத்துவம் பற்றிய அறிவு ஒரு குறிப்பிடத்தக்க அனுகூலமாக கவனத்திற் கொள்ளப்படும்.
- ஆங்கிலத்தில் புலமை, கணனி ஆற்றல் மற்றும் அரசாங்க விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளை அறிந்திருத்தல்
- தொடர்புடைய துறைகளில் உள்ள தொழில்சார் தகைமைகள் மேலதிக தகைமைகளாகும்.
- தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் குறும் பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரிகள் மற்றும் நேர்காணலுக்காக அழைக்கப்படுவர் என்பதுடன் மேற்கூறிய ஆட்சேர்ப்பு தொடர்பில் கமத்தொழில், கால்நடை, காணிகள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதியானதும் மற்றும் உறுதியானதுமாகும்.
- ஆதரவு தேடுதல் தகுதியீனமாகக் கருதப்படும் என்பதுடன் அத்தகைய விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்பங்கள்:**

சகல விண்ணப்பதாரர்களும் தங்களது சுய விபரங்கள் (CV) சகிதம் உறவினரல்லாத இரு சான்று பகிர்வோர் சகிதம் மற்றும் சகல சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து தங்கள் விண்ணப்பங்களை 2025 வைகாசி 04ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது irdcrppmu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு வேண்டப்படுகின்றனர்.

தபாலில் அனுப்பப்படும் விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரர் தற்போது அரசாங்க / அரசு சார்ந்த சேவைகளில் இருந்தால் அவர்களின் விண்ணப்பங்களை இயைபுடைய நிறுவனத்தின் தலைமையின் ஊடாக அனுப்ப வேண்டும்.

**செயலாளர்,**
**கமத்தொழில், கால்நடை, காணிகள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,**
**இல. 80/5, கொவிஜன மந்திரய,**
**ரஜமல்வத்த ஒழுங்கை,**
**பத்தரமுல்ல.**

**மேலதிக தகவல்கள் மற்றும் விளம்பரத்தின் விபரங்களுக்கு தயவு செய்து பிரவேசிக்கவும்: (https://www.agrimin.gov.lk)**
**செயலாளர்,**
**கமத்தொழில், கால்நடை, காணிகள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு.**